[2009 பிப்ரவரி 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக மதுரையிலேயும், கோவையிலேயும், திருநெல்வேலியிலேயும் இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்தப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பக்கத்தில் இருக்கக்கூடிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பெரியார் பல்கலைக்கழகத்தை மறந்து விட்டீர்களா என்று கேட்டார்கள். இந்த அரசு எந்தப் பல்கலைக்கழகத்தையும் மறக்கவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மற்ற பல்கலைக்கழகங்களிலேயும் இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக, முதல் கட்டமாக இந்த 3 மாவட்டங்களிலே, காமராஜர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் போன்ற இந்தப் பல்கலைக்கழகங்களில் நடத்தி, எப்படி இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்துவிட்டு, அடுத்தகட்டமாக மற்ற பல்கலைக்கழகங்களிலேயும் இதைத் தொடங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

52—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***47568—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கொளக்காநத்தம் பகுதியில் பருத்தியைக் கொள்முதல் செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2009 பிப்ரவரி 24]

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கொளக்காநத்தம் பகுதியில் பருத்தியைக் கொள்முதல் செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதிக்குட்பட்ட வேப்பூர், குன்னம், கொளக்காநத்தம், பரவாய் போன்ற பல்வேறு கிராமங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட எக்டேர் நிலத்தில் பருத்தி விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அங்கே விவசாயிகள் விதைப்பதற்கு முன்பும், விதைத்த பின்பும், அறுவடைக் காலங்களிலும் வருண பகவானை வேண்டி, வரம் கேட்டு, அவர்கள் விவசாயத்தைச் செய்கின்றார்கள். அதேபோல அங்கு சாகுபடி செய்யப்படுகின்ற பருத்தி சரியான விலைக்குக் கொள்முதல் செய்யப்படாததால், ஆத்தூர், கோயம்புத்தூர் போன்ற பல்வேறு பகுதிகளுக்கு ஏஜென்டுகள்மூலம் அனுப்பப்படும்போது அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, அவர்களது விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் அந்த விவசாயிகள் துன்புறுகின்ற சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 9-45

விவசாயிகள் அவர்களுடைய மூக்குத்தி, தோடு, அண்டா, குண்டான் போன்ற வீட்டுப் பொருட்களையெல்லாம் அடகு வைக்கிறார்கள். அவர்கள் விளைவித்த பருத்தியாக இருந்தாலும் சரி, நெல்லாக இருந்தாலும் சரி அல்லது கம்பு, சோளம் போன்ற விளைபொருட்களானாலும் சரி, என்னுடைய வரகூர் தொகுதியில் எந்தவொரு விற்பனை அங்காடியும் அரசாங்கத்தின்மூலம் அமைக்கப்படாததால், அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய விளைபொருட்கள் அனைத்தும் குறைந்த விலைக்கு ஏஜென்டுகள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, அந்த விவசாயிகளின் நலன் கருதி, குன்னத்திலோ அல்லது கொளக்காநத்தத்திலோ ஒரு விற்பனை நிலையத்தை அமைக்க ஏதுவாக, பரிசீலனையில் இல்லை என்ற எண்ணத்தை இந்த அரசு மாற்றிக்கொண்டு, மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு அமர்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2009 பிப்ரவரி 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நாம் கொள்முதல் செய்வதில்லை. தமிழகத்தில் 21 விற்பனைக் குழுக்களும் 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைக் கொண்டு வந்து மறைமுகமான ஏலத்தின்மூலம் நல்ல விலை பெறுவதற்கு உரிய அந்தப் பணியைத்தான் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செய்து கொண்டிருக்கிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடமே கொள்முதல் செய்வதில்லை. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பருத்தியாக இருந்தாலும் அல்லது வேறு பொருளாக இருந்தாலும் அவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வந்து, சரியான விலை கிடைக்காவிட்டால், அந்தப் பொருட்களை விற்பனைக் குழுக்களிடமே வைத்துவிட்டு, அவர்களுடைய தேவைக்கு அந்த மதிப்பீட்டிலிருந்து 75 சதவிகிதப் பணத்தைப் பெற்று விவசாயக் காரியத்தையோ மற்ற காரியத்தையோ தொடங்கலாம் என்ற நடைமுறையை நாங்கள் வகுத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் குன்னத்தில் அல்லது கொளக்காநத்தம் பகுதியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தேவை என்று கேட்கிறார். ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வாய்ப்பில்லை. தற்போது 15 கிலோ மீட்டர் தொலைவில் பெரம்பலூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமையப் பெற்றுள்ளது. குன்னம் வட்டத்தில் 12,922 எக்டேரில் பருத்தி பயிரிடப்படுவது உண்மைதான். இந்த விற்பனைக் கூடத்தில் இந்த ஆண்டு 651.89 மெட்ரிக் டன் பருத்தி வரப்பெற்று, அதிகபட்சமாக ஒரு மெட்ரிக் டன் ரூ.26 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆக, கொள்முதல் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை. அவசியமானால் அங்கே ஒரு ஒழுங்குமுறை விற்பனை நிலையத்தைத் தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

2009 பிப்ரவரி 24]

முற்பகல் 9-50

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விவசாயிகள் சம்பந்தமான பல்வேறு கோரிக்கைகளையே அமைச்சர் அவர்களிடம் கேட்டுள்ளேன். ஏனெனில் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், என்னுடைய தொகுதியில் 98 சதவிகிதம் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். எனவே, அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகின்ற இந்தச் சூழ்நிலையில், விவசாயிகளுக்கென்று பிரத்தியேகமாக ஒரு விற்பனைக் கூடத்தை அமைத்துத் தரவேண்டும். ஏனெனில், "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது" என்பார்கள். விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, தமிழகம் விவசாய நாடு, எனவே, விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கி, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். பருத்தியை விடுத்து, அதிகமாகப் பயிரிடப்படுகிற நெல், மக்காச் சோளம் போன்ற விளைபொருட்களுக்கு ஒரு விற்பனைக் கூடத்தை அங்கே அமைத்து ஊக்குவித்தால், அந்தத் தொகுதியில் இருக்கின்ற விவசாய மக்கள் அது சம்பந்தப்பட்ட பயிர்களுக்கு முன்னுரிமை வழங்கி விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னுரிமை வழங்கி இந்த ஆண்டே ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அரசு விவசாயிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறது என்று சொன்னதற்காக நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இங்கு மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்ட காரணத்தினால், குன்னம் பகுதியில் முதலிலே நிலம் கிடைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால், இந்த ஆண்டே, 2009 ஆம் ஆண்டே ஒரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர்களுடைய நிலையை எடுத்துச் சொல்லி இங்கே அந்த விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்பதையும், "உழுதவனுக்கு உழக்குக்கூட மிஞ்சவில்லை" என்றெல்லாம் எடுத்துக் கூறினார்கள். 1989 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு, இப்போது அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மார்க்கெட்டிங் கமிட்டி எல்லா இடத்திலும் cess வசூலிப்பதற்கான விளம்பரத்தைப்போட்டு 180 பொருட்களுக்கு— நெல், மா, போன்ற எல்லா விளைபொருட்களுக்கும் cess வசூலிப்பதற்காக ஆணையிட்டு, அதை செயல்படுத்துவதற்கான முயற்சிகள் நடப்பதால், அந்த cess-ஐக்கூட வியாபாரிகள், விவசாயிகள் தலையிலே கட்டிவிடுகின்ற காரணத்தினாலே, 1989 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அந்தச் சட்டத்தை தளர்த்தி, cess வசூலிப்பதை அரசு நிறுத்திக்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கோ, சந்தைகளுக்கோ விற்பதற்காக எடுத்துச் செல்கின்றபோது, cess வசூல் செய்யப்படுவதில்லை. விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்து, அவர்கள் எடுத்துச் செல்கின்றபோதுதான், ஒரு பர்சென்ட் நாம் பிடித்தம் செய்கின்றோம். அந்த ஒரு பர்சென்டை வைத்துக்கொண்டுதான் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின்மூலம் பல்வேறு நன்மைகளை நம்முடைய விவசாயிகளுக்குச் செய்து வருகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் விவசாயிகள் எடுத்துச் செல்கின்ற பொருட்களுக்கு cess

2009 பிப்ரவரி 24]

வசூலிப்பதில்லை என்று சொன்னார்கள். எங்கள் பகுதியான பெரியகுளம், போடிநாயக்கனூர் பகுதியில் அதிகமாக மா விளைச்சல் உள்ளது. பெரும்பாலான மாம்பழங்களை அவர்கள் கோயம்புத்தூர், திருப்பூர், திருநெல்வேலி போன்ற ஊர்களுக்கும், கேரளா போன்ற மாநிலங்களுக்கும் நேரடியாக எடுத்துச் செல்கின்றார்கள். ஊருக்கு வெளியே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நின்றுகொண்டு, காக்கிச் சட்டைகளைப் போட்டுக்கொண்டு, இன்றைக்கும் அவர்கள் cess வசூலித்துக் கொண்டிருக்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் என்ற போர்வையில் வியாபாரிகள் எடுத்துச் சென்றால்தான் வசூல் செய்யவேண்டுமென்ற கட்டாயம் அந்த விதியிலே இருக்கின்றது. விவசாயிகளிடத்திலே அப்படி வசூல் செய்வதாக மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொல்லக்கூடிய காரணத்தினாலே, அதைப்பார்த்து, அப்படியிருந்தால் இனிமேல் வசூல் செய்யக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் வருகிறார்கள். அந்த விவசாயப் பொருட்களையெல்லாம் ஒரே நாளிலே எடுத்துக்கொள்வதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லாமல் இருக்கின்றது. இரவு நேரங்களில் அவர்கள் வெளியிலே சாலையிலே நிற்கின்ற அவலநிலை ஏற்படுகிறது. எனவே, இந்த நிலையைப்போக்கிட, கண்டாச்சிபுரம் அருகில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்கு அரசு முன்வருமா? அதேபோன்று, எனது தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியிலே ஒரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் இயங்கி வருகிறது. அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு கட்டடம் இல்லாமல் பல ஆண்டுகளாக விவசாயிகள் நெல் மூட்டைகளையும் மற்ற விவசாயப்

பொருட்களையும் வெளியிலேயே வைத்து எடை போட்டு விற்பனை செய்கின்ற அவலநிலை இருக்கிறது. மழைக் காலங்களில் மழையிலே நனைந்து அந்த விவசாயப் பொருட்கள் எல்லாம் வீணாகின்றன. அந்த அவல நிலையைப் போக்கிட, மணலூர்பேட்டை பேரூராட்சியிலே இயங்குகின்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ஒரு புதிய கட்டடம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்படுகின்ற இடங்களில் அங்கு போதிய இட வசதி, அதாவது விவசாயப் பொருட்களைப் பாதுகாப்பாக வைக்க வாய்ப்பு இல்லை என்று எந்தெந்த இடங்களிலேயிருந்து எங்களுக்குத் தகவல் வருகிறதோ, அங்கெல்லாம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைக் கூடுதலாக நாங்கள் கட்டித் தருகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட ஒரு பகுதியைப் பற்றிக் கேட்கின்றார். தனிக் கேள்வி போட்டால் விவரம் பெற்று பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு மருத்துவர்கள் வந்து சிகிச்சை அளித்து விவசாயிகளுக்கு மருந்துகள், மாத்திரைகள் வழங்குவதாக ஒரு திட்டம் இருக்கிறது. அதற்காக நிதியொதுக்கீடும் செய்யப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரை எந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் டாக்டர்கள் இருந்து அங்கே விவசாயிகள் போய் அவர்களிடம் காண்பித்து மருந்துகள் வாங்கியதாகத் தெரியவில்லை. அந்த நிதியொதுக்கீடு விரயம் செய்யப்படுவதாகவே நான் நினைக்கிறேன். எனவே, அந்த டாக்டர்களை நம்முடைய உழவர் சந்தையிலாவது நியமித்து அங்கேயாவது விவசாயிகளைப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்கித் தர முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

2009 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு 1989-வது ஆண்டு பொறுப்பேற்று நான் வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற அந்த நேரத்திலேதான், விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருட்களை விற்பனைக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வருகிறார்கள்; சில நேரங்களிலே ஒரே நாளில் விற்பனை ஆவதில்லை; விவசாயிகள் அந்தப் பொருட்களை வைத்துக் கொண்டு அங்கே இருப்பார்கள், திடீரென்று அவர்களுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டால், உடனடியாக மருத்துவ வசதியை செய்து தரவேண்டும் என்பதற்காகத்தான் அங்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்து, மருத்துவர்களை நியமித்திருக்கின்றோம். ஆகவே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரக்கூடிய விவசாயிகள் எத்தனை பேராக இருந்தாலும், உடல்நலம் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு உரிய வைத்தியம் செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்வதைப்போல எங்கேயும் புகார் வரவில்லை. சிறப்பாகச் செயல்படுவதாகத்தான் எனக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது. (குறுக்கீடு) டாக்டர் இல்லை என்று நீங்கள் சொல்லாதீர்கள். எப்படி வேண்டுமென்றாலும் பேசலாம், இல்லையென்று சொல்லலாம். திரு. ஞானசேகரன் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். எல்லா மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதுவரை விவசாயிகள் மத்தியிலேயிருந்து எந்தப் புகாரும் வரவில்லை. "நீங்கள் டாக்டர்கள் போட்டீர்கள், டாக்டரே அங்கே இல்லை. எங்களுக்கு உடல்நலம் பாதித்தால் நாங்கள் வெளியிலே வந்துதான் வைத்தியம் பண்ணிக்கொள்கிறோம். இப்படி டாக்டர்கள் இல்லாத அளவுக்கு இருக்கிறது" என்று யாரும் புகார் சொல்லவில்லை. விவசாயியாக இல்லாதவர் இப்படிச் சொல்லிக் கொண்டு இருப்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

அமைக்கப்பட்டு அது செயல்பட்டு வருகிறது. அதேநேரத்திலே, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை வேண்டும் என்ற முறையிலேதான் தமிழக அரசின் சார்பில் நெல்லுக்கு ஊக்கத் தொகை குவிண்டாலுக்கு 1,050 ரூபாய் வரையிலும் வழங்கப்படுகிறது. ஆனால், விலை நிர்ணயிக்கிற மத்திய அரசாங்கமோ நெல்லுக்கான விலையை உயர்த்தி வழங்கவில்லை. இப்பொழுது அறிவிக்கப்பட்ட மத்திய பட்ஜெட்டிலேகூட கோதுமைக்கு மட்டுமே விலை உயர்வை அறிவித்திருக்கிறார்கள். நெல்லுக்கு உரிய விலையை மத்திய அரசாங்கம் அறிவிக்கவில்லை என்பதை நமது மாநில அரசாங்கம் வலியுறுத்தி, நெல்லுக்கான விலை உயர்வைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ளவிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்பில் ஒரு குவிண்டால் கோதுமைக்கு தருகின்ற விலையை நெல்லுக்கும் தரவேண்டும் என்ற கேள்வி, நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய கேள்வி. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிடக் கூடுதலாக ஊக்கத் தொகையாக மாநில அரசு அளித்து வருகிறது. அதனால்தான் ஊக்கத் தொகை என்ற அடிப்படையில் ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,050/-ஐ இப்போது நாம் தந்துகொண்டிருக்கிறோம். மேலும், மத்திய அரசாங்கம் விலையைக் கூட்டித் தரவேண்டும் என்று இந்த அரசாங்கம் கேட்டுக்கொண்டு இருக்கிறது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

53—

பணிமனை

***61736—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—